DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.101/2024 | Deposition of Witness for : PW6 |
| Name : திரு.நாகராஜன் | Father/Husband Name : |
| Age : 59 | Village : |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 June 2026.
A1 to A5 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது நாசரேத் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பாக சாத்தான்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 03.03.2024 ஆம் தேதி 14.00 மணிக்கு தலைமைக்காவலர் ஜெபக்குமார் என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த உதயகுமார், வயது 57 த/பெ.மணி, 154, மேலத் தெரு, குலசேகரன்குடியிருப்பு, புதுக்குளம் அஞ்சல் என்பவரிடம் இருந்து பெற்று வந்த வாக்குமூலத்தை பெற்று மனு எண்.141/24 ஆக 03.03.2024 அன்று பதிவு செய்யப்பட்டது. அதன்பின்பு சம்பவ இடம் சென்று விசாரிக்கப்பட்டு சம்பவம் உண்மையென தெரிந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, குற்ற எண்.41/24 U/s.147, 341, 294(b), 323, 324, 506(2) இ.த.ச ஆக வழக்கு பதிவு செய்து, அன்றைய தினம் 21.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் சுற்றுப்புறங்களையும் டார்ச் லைட் மற்றும் தெருவிளக்கு வெளிச்சத்தில் பார்வையிட்டு சாட்சிகள் ஜெயக்குமார், கலைஅரசன் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. 04.03.2024 அன்று காலை 8.00 மணிக்கு புதுக்குளம் பஞ்சாயத்து ஆபிஸ் அருகில் வைத்து 1 ஆவது எதிரி முத்துகிருஷ்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து அவர் கைது செய்யப்பட்ட விபரத்தை உறவினருக்கும் தெரிவித்து மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி தகுந்த வழிக்காவல் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3. 20.03.2024 அன்று 2 முதல் 5 எதிரிகள் மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை.

4. சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் எனது புலன்விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் 26.04.2024 அன்று 1 ஆவது எதிரியின் மீது ச/பி.147, 341, 294(பி), 323, 324, 506(2) இ.த.சன் கீழும், 2 ஆவது எதிரி, 3 ஆவது எதிரி, 4 ஆவது எதிரிகளின் மீது ச/பி.147, 294(பி), 323, 324 இ.த.ச ன் கீழும், 5 ஆவது எதிரி மீது ச/பி.147,

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.10 17:54:28 +0530 

294(பி), 323 இ.த.ச ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

5. நான் தான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். நான்தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சம்பவ நேரத்திற்கும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரத்திற்கும் சுமார் 44 1/2 மணி நேரம் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். 44 1/2 மணி நேரம் காலதாமதம் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று புகார்தாரர் தன்னுடைய புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளாரா, மேலும் அதற்கான காரணம் குறித்து என்னுடைய விசாரணையில் துலங்குமா என்றால் புகார்தாரர் சம்பவதன்று வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிக்கைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து Intimation கிடைக்கப்பெற்று தலைமைக்காவலர் மருத்துவமனை சென்று வாக்குமூலம் பெற்று வந்தார், இதுவே காலதாமதத்திற்கு காரணம் ஆகும்.

6. திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து தான் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு Intimation வந்தது என்றால் முதலில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து Intimation கிடைக்கப்பெற்றது, வாக்குமூலம் பெற சென்றபோது அ.சா.1 அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனை சென்றுவிட்டார், பின்பு அங்கிருந்து Intimation கிடைக்கப்பெற்றது. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு 02.03.2024 ஆம் தேதி காலை 8.35 மணியளவில்தான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து Intimation கிடைக்கப்பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் அ.சா.1 உதயகுமார் கொடுத்த புகார் வாக்குமூலம் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் 2 ஆவது பக்கத்தில் வீட்டிற்கு சென்று இரவு படுத்துவிட்டு 02.03.2024 ஆம் தேதி காலை 9 மணியளவில் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. குலசேகரன்குடியிருப்பு ஊருக்கும் சாத்தான்குளத்திற்கும் சுமார் 6 கி.மீ தொலைவு இருக்குமா என்றால் இருக்கும். சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து குலசேகரன்குடியிருப்பு சென்று ஒரு ஆம்புலன்ஸ் காயம்பட்டவை ஏற்றிக்கொண்டு திரும்பி வருவதற்கு சுமார் 3/4 மணிநேரம் ஆகும் என்றால் சரிதான். 9 மணிக்கு ஆம்புலன்ஸ் சென்று காயம்பட்டவரை ஏற்றிக்கொண்டு சாத்தான்குளம் வருவதற்கு சுமார் 10 மணி ஆகியிருக்கும் என்றால் சரிதான். என்னுடைய முதல் அறிக்கையில் 8.35 மணிக்கு சாத்தான்குளம் மருத்துவமனையில் இருந்து காயத்தகவல் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது பொய் புகார் என்றால் சரியல்ல.

8. வழக்கின் அனைத்து ஆவணங்கையும் பார்வையிட்டு புலன் ஆய்வு



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.10 17:54:40 +0530

செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு முறையான புலன் ஆய்வு செய்துதான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அ.சா.1 க்கு என்னென்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்பது குறித்து மேல்சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேல்சிகிச்சையளித்த மருத்துவர் தான் காயத்தின் தன்மை பொறுத்து காயம்பட்டவருக்கு காயச்சான்று வழங்க முடியும் என்றால் சரியல்ல.

9. புகார் வாக்குமூலம் என்னுடைய கைக்கு வந்தவுடனே சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்துதான் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் முதலில் CSR பதிவு செய்து அதன்பின்பு சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். CSR போட்டபின் யாரை விசாரித்தேன் என்பது என்னுடைய விசாரணையில் துலங்குமா என்றால் அ.சா.3 கொடிமரத்தங்கம், அ.சா.2 ராமன் ஆகியோரை விசாரித்தேன். நான் சொன்ன மாதிரி அ.சா.3, அ.சா.2 ஆகியோர்களை இரவு 8 மணிக்கு முன்பாக நான் விசாரித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று நான் சொன்ன மாதிரி எந்த விசாரணையும் செய்யவில்லை, அதனால் தான் CSR போட்டவுன் விசாரித்து வந்து தான் 8 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு சொத்துப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துப்பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்பதை என்னுடைய விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை.

10. மாதிரி வரைபடத்தில் அரசு தரப்பு சாட்சியாக சேர்த்துள்ள அ.சா.3 கொடிமரத்தங்கம், அ.சா.2 மற்றும் பிற சாட்சிகளது வீடு மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகார்தாரரின் புகார்வாக்குமூலத்தில் சம்பவ தினத்தன்று சாத்தான்குளம் நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள ஒரு ஹோட்டலில் புகார்தாரர் சாப்பாடு வாங்கிவிட்டு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் புகார் வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடவில்லை.

11. சம்பவ தினத்திற்கு மறுநாள் காலையில் 108 ஆம்புலன்ஸ்க்கு அ.சா.1 அவருடைய செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு ஆம்புலன்சை அழைத்தார் என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 108 ஆம்புலன்ஸ்க்கு அவர் தகவல் கொடுத்தாக குறிப்பிட்டுள்ளார், ஆனால் அவருடைய செல்போனில் இருந்து தொடர்பு கொண்டதாக குறிப்பிடவில்லை.

12. நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் வழக்கின் 1 ஆவது எதிரி சர்ச்க்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டு வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன், இதுகுறித்து வருவாய் துறையினரின் ஆவணங்களை பார்வையிட்டேனா, வேறு தனிநபர் யாரையாவது விசாரித்து அறிக்கை கொடுத்தேனா என்பது குறித்து கூற முடியுமா என்றால் கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்தபோது அவர்கள் அந்த விபரத்தை சொன்னார்கள். கண்ணுற்ற சாட்சிகள் யார் என்ற விபரத்தை என்னால் கூற முடியுமா என்றால் அ.சா.3 கொடிமரத்தங்கம்,



DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.10 17:54:46 +0530

அ.சா.2 ராமன் ஆவார். அ.சா.2 மற்றும் அ.சா.3 ன் வாக்குமூலத்தில் 1 ஆவது எதிரி சர்ச்க்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டு வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் அவர்கள் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளனர். சம்பவ இடமானது குலசேகரன்குடியிருப்பில் உள்ள CSI சர்ச் முன்பு வைத்து நடைபெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்ச் பக்கத்தில் உள்ள பாதையில் வைத்து நடைபெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குலசேகரன்குடியிருப்பில் கோவில் நிர்வாகம் சார்பாக கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்றால் நியாபகம் இல்லை. நியாபகம் இல்லை என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி உண்மையாகவே சம்பவ இடம் சென்று நான் விசாரித்திருந்தால் கோவில் கண்காணிப்பு கேமராவை ஆராய்ந்து ஒரு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, CCTV கேமராக்கள் வழக்கு சம்பவம் நடந்த சமயத்தில் இருந்ததா என்று தெரியவில்லை. சம்பவ இடம் சென்று நான் விசாரித்திருந்தால் CCTV கேமராக்கள் இருந்த விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் நான் சம்பவ இடம் சென்று விசாரிக்கவில்லை என்பதால் CCTV கேமராக்கள் இருந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

13. என்னுடைய விசாரணை இயந்திரத்தனமானது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் வழக்கின் 1 ஆவது எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் வழக்கின் 2 ஆவது எதிரி தினேஷ் காவல் தேர்வில் தேர்ச்சி பெற்று பணிக்கு செல்ல காத்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் 5 ஆவது எதிரி மாதவன் சட்டக்கல்லூரியில் பயின்று வழக்கறிஞராக பதிவு செய்ய காத்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. CSI சர்ச் இடம் சம்பந்தமாக சாத்தான்குளம் உரிமையில் நீதிமன்றத்தில் உரிமையில் வழக்கு நடைபெற்றது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உரிமையில் வழக்கின் புகார்தாரர் உதயகுமார் தரப்புக்கு ஆதரவாக வழக்கு எதிரிகள் வழக்கை விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த வழக்கு எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளனர் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.10 17:54:52 +0530

Judicial Magistrate, Sathankulam.